கலைஞர் 100
1924 - 2023

வாய்மையே வெல்லும்

<u>சுருக்கம்</u>

பொதுப்பணிகள் – தமிழ்நாடு அமைச்சுப்பணி – பதிவுத்துறை – வடசென்னை பதிவு மாவட்டம் - திரு.பா.பாண்டியன் என்பவர் கருணை அடிப்படையில் 12.05.2022 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராக தற்காலிகமாக பணி நியமனம் செய்யப்பட்டது – பணி வரன்முறை செய்தல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

<u>வணிகவரி மற்றும் பதிவுத் (எம்.2)துறை</u>

அரசாணை (3டி) எண்.15 நாள் :02. 08. 2023

சோபகிருது, ஆடி -17,

திருவள்ளுவர் ஆண்டு, 2054.

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் நலன் மற்றும் வேலைவாய்ப்புத்துறை, நாள் 23.01.2020.
2. பதிவுத்துறை தலைவரின் ஆணை எண்.23786/கே2/2021, நாள் 21.04.2022.
3. பதிவுத்துறை தலைவரின் கடிதம் எண்.23786/கே2/2021, நாள் 08.06.2023.

-----------

<u>ஆணை:</u>

மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட பதிவுத்துறை தலைவரின் கடிதத்தில், பதிவுத்துறையில், அரியலூர் பதிவு மாவட்டம், வாலிகண்டபுரம் சார்பதிவாளர் அலுவலகத்தில் அலுவலக உதவியாளராகப் பணிபுரிந்தபோது, 18.11.2020 அன்று பணியிடை மரணமடைந்த திரு.ம.பாலசுப்ரமணியன் என்பவரின் வாரிசுதாரர் (மகன்) திரு.பா.பாண்டியன் என்பவர் தமக்கு கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்குமாறு 22.06.2021-ல் விண்ணப்பித்துள்ளார் என்றும், நடைமுறையிலிருந்த அரசாணைகளின்படி, அன்னாரது கோரிக்கையினைப் பரிசீலனை செய்த பதிவுத்துறை தலைவர், திரு.பா.பாண்டியன் என்பவர் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்படுவதற்குரிய கல்வி மற்றும் வயது தகுதிகளை பெற்றிருந்தபடியால், அவருக்கு கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளராக மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட நடவடிக்கைகளில் பணிநியமனம் செய்து ஆணை வழங்கப்பட்டுள்ளது. அதன்படி, திரு.பா.பாண்டியன் என்பவர் 12.05.2022 முற்பகல் முதல் வடசென்னை பதிவு மாவட்டத்தில் இளநிலை

உதவியாளராகப் பணியில் சேர்ந்து தொடர்ந்து பணிபுரிந்து வருகிறார் திரு.பா.பாண்டியன், இளநிலை உதவியாளர் என்பவரின் தற்காலிகப் பணியினை வரன்முறைப்படுத்துவதற்கு பதிவுத்துறை தலைவர் மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் அரசுக்கு கருத்துருவினை அனுப்பியுள்ளார்.

2. இந்நிலையில், பதிவுத்துறை தலைவரின் கருத்துரு மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி கூர்ந்தாய்வு செய்யப்பட்டு அரியலூர் பதிவு மாவட்டம், வாலிகண்டபுரம் சார்பதிவாளர் அலுவலகத்தில் அலுவலக உதவியாளராகப் பணிபுரிந்தபோது பணியிடை மரணமடைந்த திரு.ம.பாலசுப்ரமணியன் என்பவரின் மகன் திரு.பா.பாண்டியன் என்பவரை தமிழ்நாடு அமைச்சுப் பணியில் பதிவுத்துறையில் வடசென்னை பதிவு மாவட்டத்தில் கருணை அடிப்படையில் அவர் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்த நாளான 12.05.2022 முற்பகல் முதல் அப்பணியிடத்திற்கான உடற்தகுதியினைப் பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு பணிவரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு முன்தேதியிட்டு பணி வரன்முறைப்படுத்துவதால், தனியர், ஆண்டு ஊதிய உயர்வு மற்றும் ஊதிய நிலுவைத் தொகை பெற உரிய விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

3. இவ்வாணை, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறையின் அலுவல் சார்பற்ற எண்.5077/ட்டி1/2023, நாள் 17.07.2023 மற்றும் மனித வள மேலாண்மைத் துறையின் அலுவல் சார்பற்ற எண்.5208963/ஜி1/2023-1, நாள் 28.07.2023-ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பா.ஜோதி நிர்மலாசாமி
அரசு செயலாளர்

**பெறுநர்:**

பதிவுத்துறைத் தலைவர், சென்னை-28. (இணைப்புடன்)

திரு.பா.பாண்டியன், இளநிலை உதவியாளர்,
வடசென்னை பதிவு மாவட்டம்,
(பதிவுத்துறைத் தலைவர், சென்னை-28 மூலமாக)

**நகல்:**

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை,
சென்னை-9.
மனித வள மேலாண்மைத் துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு/உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

7/8/2023.
பிரிவு அலுவலர்